மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவோ அரசுக்குக் கோரிக்கை வைக்கின்றபோது, இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும். இந்தத் தொழில்மூலம் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

சொந்தக் கட்டடம்

***6142—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீரங்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் துறையூர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 1 கோடி ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். துறையூர் தாலுகா, வடக்குவெளி கிராமம், சர்வே எண் 68/2–ல், மொத்த விஸ்தீரணம் 1.52 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டெண்டர் விடும் பணிகள் முடிந்தவுடன், மேற்படி பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி, சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனைகளைச் சரித்திரங்களாக மாற்றி, கண்ணை இமை காப்பதுபோல கழகத்தையும், ஏழையெளிய மக்களையும் கட்டிக் காத்து வரும் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த உப்பிலியாபுரம், போக்குவரத்துக் கழக கூடுதல் துணை பணிமனைக்கு ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், துறையூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்த தமிழகத்தின் தாயுருவ தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

இது கட்டடம் சம்பந்தமான கேள்வி என்றாலும்கூட, எங்களுடைய தொகுதியில் அதிகப்படியான மக்கள் கோத்தகிரி மலைப் பகுதியில் வசித்து வருகிறார்கள். பிழைப்பைத் தேடிச் சென்றவர்கள் அங்கே வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்குப் போக்குவரத்து வசதியை மேம்படுத்திக் கொடுப்பதற்காக துறையூரிலிருந்து கோத்தகிரி வழியாக ஊட்டி வரை பேருந்து வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் துறையின் சார்பாக ஆய்வு

செய்யப்பட்டு, பயணிகளினுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் தொடங்குவதற்கான அறிவிப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் எப்போது தொடங்கப்படும் என்றும், தீபாவளி பண்டிகையையொட்டி ஆம்னி பஸ் உரிமையாளர்கள் கூடுதல் கட்டணம் வசூல் செய்யாமல் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்படுமென்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 அக்டோபர் 30]

தமிழகத்தில் இருக்கின்ற சாதாரண, அடித்தட்டு மக்கள் தீபாவளிப் பண்டிகை தினங்களில் தங்களுடைய சொந்த ஊருக்கு சிறப்பாகச் சென்று வர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இதுவரை தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு 8,350 சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறப்புப் பேருந்துகளில் கணினிமூலம் முன்பதிவு (online reservation) செய்வதற்கான சிறப்புத் திட்டம் 2011 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் இன்று படித்தவர்கள் மத்தியில், இளைஞர்கள் மத்தியில், மக்கள் மத்தியில் மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்றுள்ளதற்குச் சான்றாக, 2012 ஆம் ஆண்டு தீபாவளி திருநாளில் ஒரு நாள் முன்பதிவுமூலம் பெறப்பட்ட தொகை, ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாய். 2013 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் ஒரு நாள் முன்பதிவுமூலம் பெறப்பட்ட தொகை, ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவோடு முன்பதிவுமூலம் பெறப்பட்டிருக்கின்ற தொகை, ஒரு கோடியே 43 இலட்சம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு முன்பதிவு என்பது பயணிகள் எளிதாக பயணம் செய்வதற்கான திட்டமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இச்சீரிய திட்டம் தமிழக மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த ஆம்னி பேருந்துகளுடைய உரிமம் இரத்து செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் கட்டணம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு சிறப்புத் தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொலைபேசி

எண்ணில் புகார் தெரிவிக்கப்பட்டால், எந்தப் பேருந்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்து, அதனுடைய உரிமம் இரத்து செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

வீட்டுமனைப் பட்டா

***21734—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34—வது வட்டம், கொடுங்கையூர், காமராஜர் நகர், ஜம்புலி தெரு மற்றும் திருவள்ளூர் சாலை ஆகிய பகுதிகளிலுள்ள கிராம நத்தத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். கோட்டை–தண்டையார்பேட்டை வட்டம், பெரம்பூர் தொகுதி, 34—வது வட்டம், கொடுங்கையூர், காமராஜர் நகர், ஜம்புலி தெரு மற்றும் திருவள்ளூர் சாலை ஆகிய பகுதிகளில் சர்க்கார் புறம்போக்கு கிராம நத்தம் என நிலப் பதிவேட்டில் பதிவாகியுள்ளதாகவும், மேற்படி புலங்களுக்கு நத்தம் நில வரித் திட்டத்தின்கீழே களப் பணிகள் செய்யப்பட்டு, அங்கு வசிக்கும் 629 நபர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தோராயப் பட்டாவை வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*